

தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாணவரணி அமைப்பாளர் அருண்காந்த் தலைமையில் மாணவர்கள், இளைஞர்களை தவறான வழி நடத்தும் போதை பொருள் பயன்படுத்திய அமைச்சரை கைது செய்ய வலியுறுத்தி அமைச்சரை கண்டித்து நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு தி.மு.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நிகழ்வில் எம்.எல்.ஏ. ஆஸ்டின், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், மேயர் மேரிபிரின்சி லதா, மாநகர செயலாளர் ஆனந்த், மாவட்டப் பொருளாளர் கேட்சன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கழகத்தினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

### இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் - ஆத்திக்காட்டுவிளை மற்றும்

# மேலகிருஷ்ணன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, ஜூலை 1 –

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் ஆத்திக்காட்டுவிளை மற்றும் மேலகிருஷ்ணன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 28.6.2026, ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் ஆத்திக்காட்டு விளை பகுதியில் வைத்து இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் மிலன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் தில்லை செல்வம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் குமார் சேரலாதன், ஒன்றிய துணைச் செயலாளர் பாபு கழக நிர்வாகிகள் முத்துலிங்கபெருமாள்,

கிருஷ்ணமணி, தியாக ராஜன், அப்பாத்துரை, விஜயகுமார், கணேசன் உட்பட ஒன்றிய, ஊராட்சி கிளை கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

தீர்மானம்: 2

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகி களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் இராஜாக்கமங்கலம் ஒன்றிய கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தீர்மானம்: 3

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மா னிக்கப்பட்டது.

### அமைச்சார் சரத்குமாரை பதவியிலிருந்து நீக்க வலியுறுத்தி

# தூத்துக்குடியில் தடையை மீறி தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினர் 125 பேர் கைது!



தூத்துக்குடி, ஜூலை 1 –

தூத்துக்குடி தமிழக வெற்றிக் கழக தலைவரும் முதலமைச்சருமான விஜய் அமைச்சரவையில் உள்ள அமைச்சர் சரத்குமார் கடந்த சில நாட்களுக்கு முன்பு பொதுஇடத்தில் வெள்ளை பவுடர் பயன்படுத்துவது போல் வீடியோ ஒன்று வெளியாகி சர்ச்சையானது அது மாத்திரை என அமைச்சர் வீடியோ வெளியிட்டு விளக்கம் அளித்திருந்தார் ஆனால் தமிழகத்தில் பொறுப்பான இடத்திலிருந்து கொண்டு தேவையில்லாத செயல்களில் ஈடுபட்ட அமைச்சர் சரத் குமார் மக்கள் பணியாற்றுவது சரியாக இருக்காது அதனால்அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்திருந்த நிலையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநில தி.மு.க. மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் அறிவிப்பின் படி தமிழகம் முழுவதும் அமைச்சர் சரத்குமாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது.

அதற்கு தமிழக அரசு அனுமதி வழங்க வில்லை இருப்பினும் தடையை மீறி தூத்துக்குடி அண்ணாநகர் 7வது தெரு சந்திப்பில் வடக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன், தெற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ ஆகியோரின் உத்தரவு படி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள் வடக்கு வக்கீல் சீனிவாசன்,தெற்கு அருண்குமார், ஆகியோர் தலைமையில் தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வக்கீல் பால்துரை வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கோகுல்நாத் ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு காவல் துறை அனுமதி அளிக்காததால் காவல்துறையுடன் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்ட நிலையில் சுமார் 300 பேர் கலந்து கொண்ட நிலையில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் அந்தோணிகண்ணன், பகுதி செயலாளர் ரவீந்திரன் ,இளைஞர்அணி துணை அமைப்பாளர்கள் செல்வின், சங்கரநாராயணன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ரூபராஜா, மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் சத்யா, தொழிலாளர்அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், தொண்டரணி துணை அமைப்பாளர் மணி, கூட்டுறவு ரேசன்கடை பணியாளர்கள் சங்க செயலாளர்கள் வேல்முருகன் ,வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, செல்வராஜ் ,பொன்னுச்சாமி, பகுதி அணி அமைப்பாளர் சூர்யா, தெற்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ்பாலன், மாணவரணி துணை அமைப்பாளர் பிரதீப் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் செல்வம் உள்பட 125 பேர் கைது செய்யப்பட்டு தனியார் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.



த.வெ.க. அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தி வடக்கு மாவட்ட மாணவரணி சார்பாக நகர மாணவரணி அமைப்பாளர் ஸ்டீபன் ராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தங்கபாண்டியன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர், பேரூர் செயலாளர்கள், பேரூராட்சி தலைவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், சண்முகபுரம் ஊராட்சி, ஆத்திக்கிணறு கிராமம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.34.60லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீத கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார், பள்ளி தலைமை ஆசிரியர் சிவஞானசுந்தரி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் செல்வி, வட்டார கல்வி அலுவலர் சங்கீதா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் ஆத்திக்காட்டுவிளை மற்றும் மேலகிருஷ்ணன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் மிலன் தலைமையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தில்லை செல்வம், குமார் சேரலாதன், பாபு, முத்துலிங்கபெருமாள், கிருஷ்ணமணி, தியாகராஜன், அப்பாத்துரை, விஜயகுமார், கணேசன் உட்பட ஒன்றிய, ஊராட்சி கிளை கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி – திருநெல்வேலி – கன்னியாகுமரி மாவட்ட நாட்டுப்படகு

# மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் மானிய விலை உயர்த்தக்கூடாது!

## மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தூத்துக்குடி, ஜூலை 1–

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் கடலோர மாவட்ட மக்களின் மீனவர்களின் முதன்மை வாழ்வாதாரம் மீன்பிடித் தொழிலாகும். பல்லாயிரக்கணக்கான மீனவ மக்கள் கடலையும் அரசின் திட்டங்களையும் நம்பி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் தூத்துக்குடி, திருநெல் வேலி, கன்னியாகுமரி மாவட்ட நாட்டுப்படகு மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கு தொழிலக மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு தொழில் முடங்கும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மீனவ மக்களின் நெடுங்கால கோரிக்கையை ஏற்று 2010ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு வகித்த போது பதிவு செய்யப்பட்ட ஒரு நாட்டுப் படகுக்கு வெளி சந்தையில் மண்ணெண்ணெய் விலை எவ்வளவாக இருந்தாலும் ஆண்டிற்கு 2400 லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையாக ரூ.25 க்கு வழங்குவது என்றும் எக்காரணத்தை கொண்டும் விலையை உயர்த்தக் கூடாது என்றும் அரசாணை பிறப்பித்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பபட்டுள்ளது.

நாட்டுப்படகு மீனவர்களுக்கு பெரிதும் பயனுள்ள இத்திட்டத்தின் படி மண்ணெண்ணெய் அளவு ஆண்டிற்கு 3400 லிட்டர் என உயர்த்தப்பட்டது. 2023ம் ஆண்டு இராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் மாநாட்டின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 3700 லிட்டராக மண்ணெண்ணெய் அளவை உயர்த்தியுள்ளார்.

இதனடிப்படையில் தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குப்படுத்தும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தூத்துக்குடி, திருநெல்;வேலி, கன்னியாகுமரி மாவட்ட மீனவர் களின் 6500 நாட்டுப்படகுகளுக்கு ரூ.25 விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் கொள்முதல் மற்றும் விற்பனையில் ஏற்படும் வித்தியாச தொகையை அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

நாட்டுப்படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தில் வரப்பிரசாதமாக உள்ள இத்திட்டத்தை மேலும் அதிகப்படுத்த வேண்டும். ரூ.25 க்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் விலை உயர்த்த உள்ளதாகவும் அளவை குறைக்க உள்ளதாகவும் செய்தி வருகிறது. இது மீனவர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே மீனவர்களின் நலனை கருதி இத்திட்டத்தின்படி நாட்டுப்படகு எண்ணிக்கையை, வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவை அதிகப்படுத்தி விரிவுபடுத்த வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வே.ஜெயபாலன் – மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. – மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

# தென்காசி மாவட்ட மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## மாணவர் அணியினர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்!

தென்காசி, ஜூலை 1 –

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் அமைச்சர் சரத்குமார் பொது வெளியில் போதை பொருள் உபயோகப் படுத்தியதை கண்டித்து போலீசாரின் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் மற்றும் 14 பெண்கள் உட்பட 120 பேரை போலீசார் கைது செய்தனர்.

தமிழக மனிதவள மேலாண்மை அமைச்சர் சரத்குமார், ஐபிஎல் போட்டியின் போது போதைப்பொருள் பயன்படுத்தியதாக சமூக வலை தளங்களில் பரவிய வீடியோ பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனை கண்டித்தும் அமைச்சர் சரத்குமார் உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு காவல்துறையின் தடையை மீறி கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை யில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முஹ்மூதா வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லத்துரை, முத்துப்பாண்டி, சேக்தாவூது, ஆறுமுகச்சாமி,சேசுராஜன், மாவட்டப் பொருளாளர் ஷெரீப், பொதுக்குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன், சாமித்துரை, ரஹீம், தமிழ்செல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், ரமேஷ், சீனித்துரை, திவான்ஒலி, சுரேஷ், அன்பழகன், மணிகண்டன், ஜெயா, நகர செயலா ளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், பீரப்பா, கணேசன், பேரூர் செயலாளர்கள் குற்றாலம் குட்டி, முத்தையா, பண்டாரம், முத்து, ராஜராஜன்,வெள்ளத்துரை, உசேன், சிதம்பரம், கோபால், தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஷேக்அப்துல்லா, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான்,தலைமை பேச்சாளர்கள் கடையநல்லூர் இஸ்மாயில், வெல்டிங் மாரியப்பன், முத்துவேல்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, முருகன், இசக்கிப்பாண்டியன், முத்து ராமலிங்கம்,முத்துக்குமார், அழகு தமிழ், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் ஜீவானந்தம், கதிர்,வீரபாண்டியன், ராஜேந்திரன், கரிசல் வேலுச்சாமி, கருப்பண்ணன், டாக்டர் மாரி முத்து, தங்க பாண்டியன், இசக்கித்துரை, சூர்யாமணி என்ற ஈஸ்வரன், சுப்பிரமணியன், சண்முகநாதன், சின்னத்தாய் சண்முகநாதன், ராமராஜ், கஜேந்திரன்,மோகன்ராஜ், அப்துல் ரஹீம், சுப்பிரமணியன், ஹக்கீம்,கலாநிதி, கபிலன், நகர நிர்வாகிகள் ராம்துரை, பால்ராஜ், இசக்கிரவி, சன்ராஜா, சோமு, ஆபில்,ராமநாதன் மைதீன் மற்றும் 14 பெண்கள் உட்பட 120 தி.மு.க.வினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

இந்த சம்பவத்தின் போது காவல் துறைக்கும் தி.மு.க. வினருக்கும் இடையே வாக்குவாதம் ஈடுபட்டதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரும் அன்று (29062026) மாலையில் விடுதலை செய்யப் பட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மதுரை கே. தாவூது**

**ஜூலை 1 (2004)**



**மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**